# மலைகளுக்குச் சவால்விடும் விசுவாசமும், கர்த்தருடைய ஆசீர்வாதமும்

Transcribed and edited for clarity from a message spoken on January 30, 2011 in Chennai

By *R.S.Milton*

*சகோதரர் டிவேர்ன் ∴புரோம்கே எழுதிய The Ultimate Intention என்ற புத்தகத்திலிருந்து ஒரு கவிதை, சகோதரர் வாட்ச்மேன் நீ எழுதிய Expecting the Lord's blessings என்ற ஒரு செய்தி, டி.ஆஸ்டின் ஸ்பார்க்ஸ் எழுதிய The faith that challenges the mountains என்ற ஒரு சிறிய செய்தி ஆகிய மூன்றையும் குறித்து நான் கொஞ்சம் சொல்லப்போகிறேன். Expecting the Lord's blessings என்ற செய்தி Twelve baskets full என்ற அவருடைய செய்திகள் அடங்கிய ஒரு புத்தகத்தில் உள்ளது. அந்தப் புத்தகத்தில் ஏறக்குறைய 30 வெவ்வேறு செய்திகள் உள்ளன. அற்புதமான செய்திகள்!*

### 1. எண்ணங்கள் - கவிதை

Whenever you cultivate a thought,
remember it will trace
with certain touch in pictorial form
a story on your face.
Whenever you dwell upon a thought,
remember it will roll
into your being and become
a fiber of your soul.
Whenever you send out a thought,
remember it will be
a force throughout the universe
for all eternity.

எப்போதெல்லாம் நீங்கள் ஓர் எண்ணத்தை விதைக்கிறீர்களோ, அது உங்கள் முகத்தில் ஒருவிதமான வடிவத்தை உண்டாக்கும். எப்போதெல்லாம் நீங்கள் ஓர் எண்ணத்தை உங்களுக்குள் சுற்றிக்கொண்டேயிருக்க விடுகிறீர்களோ, அப்போதெல்லாம் அது உங்கள் ஆத்துமாவில் ஒரு நாறாக, ஓர் இழையாக மாறிவிடும். நாம் அடிக்கடி சொல்வதுபோல நம் கட்டமைப்பாக மாறிவிடும். நாம் ஓர் எண்ணத்தை வெளியே பரப்பிவிடும்போது, அது இந்த உலகத்தில் நித்தியம்வரைக்கும் ஒரு பெரிய சக்தியாக மாறிவிடும்.

நாம் ஒரு சிந்தனையை விதைக்கும்போது, அது நம்முடைய தோற்றத்திலே ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறது. நாம் ஒரு சிந்தனைக்குச் சுற்றிச்சுற்றி இடம் கொடுக்கும்போது, அது நம்முடைய ஆத்துமாவில் ஓர் இழையாக மாறிவிடுகிறது. எந்த எண்ணங்களுக்கு நாம் தொடர்ந்து இடம் கொடுத்துக்கொண்டேயிருக்கிறோமோ, அந்த எண்ணங்கள்தான் நம்மை மாற்றும். எந்த எண்ணங்கள் ஒரு மனிதனைச் சுற்றிச்சுற்றி வந்து நிரப்புகிறதோ, அந்த எண்ணங்கள்தான் அந்த மனிதனுடைய உள்ளான குணத்தையும், புறம்பான தோற்றத்தையும், வாழ்க்கையையும் தீர்மானிக்கும்.

"*எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்*" (நீதி. 4:23). நம்முடைய இருதயத்தில் எப்படிப்பட்ட எண்ணங்கள், எப்படிப்பட்ட உணர்ச்சிகள் நிரம்பியிருக்கின்றன என்பதைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எந்த எண்ணங்களுக்கும், எந்த உணர்ச்சிகளுக்கும், நாம் தொடர்ந்து இடம் கொடுக்கிறோமோ, அவைகளே நம் வாழ்க்கையையும், நம் ஆசீர்வாதத்தையும், தீர்மானிக்கும்.

### 2. கர்த்தருடைய ஆசீர்வாதம்

*கர்த்தருடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்பது.* இந்தச் செய்தியின் சாராம்சத்தை நான் சொல்லுகிறேன். யோவான் 6ஆம் அதிகாரம். ஆண்டவராகிய இயேசு 2 மீன்களையும், 5 அப்பங்களையும்கொண்டு 5000 மக்களைப் போஷிக்கிறார். இன்னொருமுறை அவர் 7 அப்பங்களையும், சில மீன்களையும்கொண்டு 4000 பேரைப் போஷிக்கிறார். 5 அப்பங்களைக்கொண்டு அதிகபட்சம் நாம் 5 பேரைப் போஷிக்கலாம். 5 அப்பங்

களைக்கொண்டு 5000 பேருக்குச் சாப்பாடு கொடுக்கமுடியுமா? இது எப்படி முடியும்? முடியுமா? முடியாது. ஆனால், 5 அப்பாங்களைக்கொண்டு 5000 பேரைப் போஷிக்க முடியுமென்றால் இதற்குப் பெயர்தான் தேவனுடைய ஆசீர்வாதம்.

### 1. நம்முடைய வளங்களுக்கும் அப்பால்

நம்முடைய உழைப்பு, நம்முடைய செயல், நம்முடைய ஆற்றல் ஆகியவைகளுக்கு ஏற்றாற்போல் ஒரு பிரதிபலன் கிடைத்தால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால், நம்முடைய உழைப்பு, நம்முடைய முதலீடு, நம்முடைய திறமை, நம்முடைய உழைப்பு ஆகியவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு ஒரு பிரதி பலன் கிடைத்தால் அதுதான் ஆசீர்வாதம். நம்முடைய வளங்கள் குறைவாக இருக்கலாம்: நம்முடைய நேரம், பணம், ஆள்பலம், ஆற்றல், திறமை குறைவாக இருக்கலாம்; நாம் மிகவும் சிறியவர்களாக இருக் கலாம். இவைகளைக்கொண்டு நாம் பெரிய ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனால், இவைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டு தேவன் ஒன்றைச் செய்தால் அதுதான் தேவனுடைய ஆசீர்வாதம்.

நாம் ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவித்தால் ஒரு வருடத்தில் எத்தனைபேரைச் சம்பாதிப்போம்? ஒவ் வொருவரும் இன்னொருவரைச் சம்பாதிக்கலாம். ஆனால், ஒவ்வொருவரும் 10 பேரைச் சம்பாதித்தால் அது தேவனுடைய ஆசீர்வாதம். ஏனென்றால், நம் உழைப்புக்கு இன்னொருவரைச் சம்பாதிப்பதே மிகவும் கடினம். நம்முடைய உழைப்பு, நம்முடைய திறமை, நம்முடைய கொடைகள், நாம் செலவழிக்கிற நேரம் இவைகளுக்கெல்லாம் நாம் இன்னொருவரை எதிர்பார்க்கலாம். ஆனால், இந்த வருடத்தில் ஒவ்வொரு வரும் இன்னும் பத்துப்பேரைச் சம்பாதிக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், உண்மை யிலே அது தேவனுடைய ஆசீர்வாதம். இதுதான் இந்தச் செய்தியின் சாராம்சம்.

நம்முடைய உழைப்பில் குறைகள் இருக்கும், பலவீனங்கள் இருக்கும், தவறுகள் இருக்கும். நாம் அவ் வளவு திறமைசாலிகள் இல்லை, நம்மிடம் பெரிய கொடைகள் இல்லை, நாம் தவறாகப் பேசுகிறோம், காரியங்களைத் தவறாகச் செய்கிறோம். ஆனால், நம் உழைப்பில் ஆசீர்வாதம் இருக்கிறது. அது எப்படி? அதுதான் கர்த்தருடைய ஆசீர்வாதம்.

நம்முடைய வளங்களுக்கு மிஞ்சி, அப்பாற்பட்டு, பிரதிபலன் கிடைத்தால் அதுதான் கர்த்தருடைய ஆசீர்வாதம். 1000 ரூபாய் முதலீடு செய்தால் 10000 ரூபாய் கிடைக்கும் என்பது சாதாரணம். 1000 ரூபாய் முதலீடு செய்தால் 1 கோடி ரூபாய் கிடைக்கிறது என்றால் அது சாதாரணம் இல்லை. இது கர்த்தருடைய ஆசீர்வாதம்.

### 2. நம்முடைய குறைகளுக்கும் அப்பால்

இரண்டாவது, நம்மிடம் எவ்வளவோ குறைகள் இருக்கும். மனித கணக்கீட்டின்படி பார்த்தால், இவ்வளவு குறைகளை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட பலன்கள் அல்லது நன்மைகள் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால், அவ்வளவு குறைகளுக்கும் அப்பாற்பட்டு அங்கே ஆசீர்வாதம் இருக்கிறது, நன்மை களும், பலனும் இருக்கின்றன. அது ஆசீர்வாதம்.

எதிர்மறையாகச் சொல்லப்போனால், இரவெல்லாம் பாடுபட்டும் அவர்கள் ஒரு மீனும் பிடிக்கவில்லை. அங்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லை. நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நம்ப வேண்டும், கர்த்த ருடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க வேண்டும். வெறுமனே "நான் இவ்வளவு நேரம் செலவழிக்கிறேன்; ஆகவே, இவ்வளவு நன்மை கிடைக்கும். இவ்வளவு உழைக்கிறேன். ஆகவே, இவ்வளவு நன்மை கிடைக் கும்," என்பதல்ல. கர்த்தர் என்னை ஆசீர்வதித்தால் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, மிஞ்சி, எனக்குக் கிடைக்கும்.

தேவனுடைய மக்களுக்கும் தேவனற்ற மக்களுக்கும் இடையேயுள்ள பெரிய வேறுபாடு என்ன? கர்த்த ருடைய ஆசீர்வாதம்.

கடைசியாக, அவர் இன்னொரு எண்ணத்தைச் சொல்லுகிறார். எது கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்? அதற்கு அவர் தெளிவாகப் பதில் சொல்லவில்லை. இரண்டுபேர் ஒரே காரியத்தைச் செய்கிறார்கள். ஒருவர் போதுமான நேரம் செலவழித்து, போதுமான அணுகுமுறைகளையும், வழிமுறை களையும் பின்பற்றி, போதுமான ஆட்களைவைத்து, நன்றாகச் செய்கிறார். இன்னொருவர் தவறாக, ஏனோ தானோவென்று எப்படியோ செய்துமுடிக்கிறார். ஆனால், கடைசியில் பார்த்தால் அவர் அதிகமான ஆசீர்வாதம் பெறுகிறார். இன்னொருவருக்கு அதன் முடிவில் அழுத்தமும், பாரமும், சுமையும்தான் மிஞ்சி யிருக்கிறது. இரண்டுக்கும் என்ன வேறுபாடு? தேவனுடைய ஆசீர்வாதம். "இது அநியாயம் இல்லையா?" என்று நீங்கள் கேட்கலாம். இல்லை. அவர் யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தார். ஏன்? என்ன

காரணம்? இதற்கு எளிமையான பதில் சொல்ல முடியாது. தேவனைக் கேள்விகேட்க முடியாது என்பது உண்மைதான். அவர் யார்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவர்மேல் இரக்கமாயிருக்கிறார். யார்மேல் உருக்கமாகயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவர்மேல் உருக்கமாயிருக்கிறார் (ரோமர் *9:15*) என்பது உண்மைதான்.

### *3. ஆசீர்வாதத்தின் தளம்*

ஆனால், தேவன் ஒருவனை ஆசீர்வதிப்பதற்கான ஓர் ஆழமான தளம் இருக்கிறது. ஒருவன் நேர்த்தியாகச் செய்யலாம் அல்லது செய்யாமல் போகலாம். தேவன் ஒருவன்மேல் இரங்கலாம் அல்லது இரங்காமல் போகலாம். ஆனால், இவைகளுக்கு அப்பாற்பட்டு தேவன் ஒருவனை ஆசீர்வதிப்பதற்கான மிக ஆழமான ஒரு தளம் இருக்கிறது. தேவன் எப்படி ஒரு மனிதனை ஆசீர்வதிக்கிறார். ஒரு வசனம் நினைவுக்கு வருகிறது. "*இதோ, உள்ளத்தில் உண்மை இருக்க விரும்புகிறீர்*" (சங். 51:6).

சரி-தவறை வைத்துத் தேவன் ஆசீர்வதிப்பதில்லை என்பது நமக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். "அப்படியானால் சரியாகச் செய்வதைப்பற்றியும், தவறாகச் செய்வதைப்பற்றியும் தேவனுக்குக் கவலையில்லையா?" என்று நாம் கேட்கலாம். சரி அல்லது தவறு என்று நாம் முக்கியப்படுத்துகிற, மிகைப்படுத்துகிற நிறைய காரியங்களில் தேவனுக்கு எந்த ஈடுபாடும் இல்லாமல் போகலாம். தேவனுடைய பார்வையில் சில காரியங்கள் அவருடைய ஆசீர்வாதத்துக்குத் தடையாக அல்லது தளமாக இருக்கலாம். எந்தக் காரியங்கள் சரியாக இருக்க வேண்டும் என்று மனிதர்கள் வலியுறுத்துகிறார்களோ, அந்தக் காரியங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தடுப்பதற்கோ அல்லது கொடுப்பதற்கோ முக்கியமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவன் தம் ஆசீர்வாதத்தைக் கொடுப்பதற்கோ அல்லது தடுப்பதற்கோ மிக உள்ளான சில காரியங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

"தேவனே, உம்முடைய ஆசீர்வாதம் எனக்குத் தேவை. வேறு எதுவும் இல்லாமல் போனாலும் பரவாயில்லை. உம்முடைய ஆசீர்வாதம் இருந்தால் போதும். அதைப் பெறுவதற்கு என்ன வழி, என்ன தளம் என்று சொல்லும்," என்று நாம் தேவனிடத்தில் கேட்க வேண்டும். அந்தத் தளம் நம்மிடம் இருந்தால் போதும். அப்போது நாம் காரியங்களை எப்படிச் செய்தாலும் அது பெரிய விஷயமாக இருக்காது. ஆனால், நாம் செய்வதில் தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும். இதன் பொருள், காரியங்களை எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்பதை நான் உற்சாகப்படுத்துவதாக நினைத்துக்கொள்ள வேண்டாம்.

தேவனுடைய மக்கள் தேவனிடத்தில் முதலாவது அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்க வேண்டும். அப்போது நம்மிடம் 5 அப்பங்கள்தான் இருந்தாலும், அதைக்கொண்டு நாம் 5000 பேரைப் போஷிக்க முடியும். ஒருவேளை ஒரு பணக்காரனுடைய வாழ்க்கையின் ஆசீர்வாதத்தைவிட நம்முடைய வாழ்க்கையின் ஆசீர்வாதம் பெரிதாக இருக்கும். இதுதான் இந்தச் செய்தியின் கருப்பொருள். நம்மிடம் கொஞ்சம் வளங்களே இருக்கலாம். நம்மிடம் இருக்கும் வளங்களும் குறைவுள்ளவைகளாக இருக்கலாம். அவைகளையெல்லாம் மீறி கர்த்தர் ஆசீர்வதிப்பார். நாம் தேவனிடத்தில் அந்த ஆசீர்வாதத்தைத்தான் கேட்க வேண்டும்.

"ஆண்டவரே, என்னிடம் அதிகப் பணம் இல்லை. என் சம்பளம் மிகக் குறைவு. என் சம்பளத்தைக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. என் நேரத்தைவைத்து ஒன்றும் செய்ய முடியாது. என் படிப்பைவைத்து ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், நீர் என்னை ஆசீர்வதிக்க விரும்புகிறீர் என்று எனக்குத் தெரியும். அந்த ஆசீர்வாதத்தை நான் எதிர்பார்க்கிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று நாம் ஜெபிக்க வேண்டும். அப்போது சம்பளம் குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந் தாலும் சரி, நம் பிள்ளைகள் கான்வெண்ட பள்ளியில் படித்தாலும் சரி, மாநகரப் பள்ளியில் படித்தாலும் சரி, நாம் இந்தியாவில் வாழ்ந்தாலும் சரி, அமெரிக்காவில் வாழ்ந்தாலும் சரி, அது ஒரு பொருட்டேயில்லை. இதுதான் இந்தச் செய்தியின் பாரம்.

### 3. மலைகளுக்குச் சவால் விடும் விசுவாசம்

அடுத்த செய்தி, *மலைகளுக்குச் சவால்விடும் விசுவாசம்*. காலேப்புக்கு இப்போது 85 வயதாகிவிட்டது. மோசே இறந்துவிட்டார். யோசுவாதான் படைகளை நடத்துகிறார். அவருடைய தலைமையில் அவர்கள் கானான் நாட்டை வென்று ஒவ்வொரு கோத்திரத்துக்கும் நிலத்தைப் பிரித்துக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் காலேப் யோசுவாவிடம் போய், "*தேசத்தை வேவுபார்க்கக் கர்த்தரின் தாசனாகிய மோசே என்னைக் காதேஸ்பர்னேயாவிலிருந்து அனுப்புகிறபோது எனக்கு நாற்பது வயதாயிருந்தது. என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறுசெய்தி கொண்டுவந்தேன். ஆனாலும், என்னோடேகூட வந்த என் சகோதரர் ஜனத்தின் இருதயத்தைக் கரையப்பண்ணினார்கள். நானோ என் தேவனாகிய கர்த்*

*தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன். அந்நாளிலே மோசே: நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியால், உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமா யிருக்கக்கடவது என்று சொல்லி ஆணையிட்டார். இப்போதும், இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில் கர்த்தர் அந்த வார்த்தையை மோசே யோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று. இதோ, இன்று நான் எண்பத்தைந்து வய துள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது. யுத்தத்துக்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால், கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும். அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள் விப்பட்டீரே. கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி அவர்களைத் துரத்திவிடுவேன்,"* என் றான் (யோசுவா 14:7-12).

நாற்பது வயதில் காலேப் பெரிய போராளி. இப்போது அவருக்கு 85 வயது. ஆனால், அவர் என்ன கேட் கிறார்? "இங்கு ஒரு மலைப்பிரதேசம் இருக்கிறது. இங்கு அரக்கர்களெல்லாம் வாழ்கிறார்கள். அரக்கர்கள் வாழ்கிற மலைப்பகுதியை நீர் எனக்குக் கொடும். நான் அவர்களை வென்று அந்த மலைப்பிரதேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வேன்," என்று சொல்லுகிறார். இதுபோல் நாம் எதிர்கொள்கிற பல மலைகள் இருக் கலாம். பணநெருக்கடி என்கிற மலையாக இருக்கலாம். சுகவீனம் என்ற மலையாக இருக்கலாம். ஊழியத் தில் மலைகள் இருக்கலாம். "இந்த மலையைக் கொடும்," என்று நாம் கேட்போமா? "ஆண்டவரே, இந்த மலை வேண்டாம்," என்றுதான் நாம் சொல்வோம். ஆனால், காலேப், "இந்த மலையைக் கொடும்," என்று கேட்கிறார். "நான் மலைகளைப் பார்க்கும்போது புறமுதுகு காட்டி ஓடமாட்டேன். இந்த மலையை நான் போராடி வெற்றிபெறுவேன்," என்று சொல்லமுடியுமா?

ஒரேவொரு குறிப்பை மட்டும் நான் அடிக்கோடிட்டிருக்கிறேன். சுற்றிப்பார்த்தால் நாம் வெற்றிபெறுவோம் என்று நம்புவதற்கான சூழ்நிலையே இல்லை. "தோற்றுவிட்டால்!" என்ற பயம், திகில் நம் இருதயத்தைக் கவ்விப் பிடித்துக்கொள்ளும். கர்த்தர்மூலமாக மலையைப் பார்க்க வேண்டும். மலையின்மூலமாகக் கர்த் தரைப் பார்க்கக்கூடாது. கர்த்தர்வழியாக மலையைப் பார்த்தால் மலை மிகவும் சிறியதாகத் தோன்றும். மலையின்வழியாகக் கர்த்தரைப் பார்த்தால் மலை மிகவும் பெரியதாகவும், கர்த்தர் மிகச் சிறியவராகவும் தெரிவார். ஆனால், பொதுவாக எது உண்மை? மலைவழியாகக் கர்த்தரைப் பார்ப்போமா அல்லது கர்த்தர் வழியாக மலையைப் பார்ப்போமா? மலைதான் நமக்குப் பெரிதாகத் தோன்றும். கர்த்தர் மிகவும் பெரிய வராகத் தோன்றமாட்டார்.

"ஒருவேளை இந்த நோயில் நாம் செத்துப்போவோமோ! ஒருவேளை இந்தக் கடனில் மூழ்கிவிடு வோமோ! ஒருவேளை இந்தத் தேர்வில் தோற்றுவிடுவோமோ!" என்ற பயம்.

எல்லா வேலைகளையும் ஆரம்பிக்கிறவர் தேவன். தேவன் தம் வேலையில் நமக்கு ஒரு பகுதியைக் கொடுக்கிறார். இதுதான் நம் வாழ்க்கையை நாம் பார்க்க வேண்டிய விதம். இது மிகவும் அடிப்படை யான ஒரு காரியம். படிப்பது, நம் குடும்பத்தை நடத்துவது, வேலைபார்ப்பது. போன்ற எல்லா வேலை களையும் செய்யச்சொல்வது யார்? இவைகளையெல்லாம் நாம் செய்கிறோமா அல்லது தேவன் நமக்கு இந்தப் பணியைக் கொடுத்திருக்கிறாரா? நாம்தான் இந்த வேலையைச் செய்கிறோம் என்பது இயற்கை யான மனிதர்களுடைய கண்ணோட்டம். "நான் படிக்க வேண்டும், நான் வேலைசெய்து பணம் சம்பாதிக்க வேண்டும், நான் குடும்பத்தை நடத்த வேண்டும், நான் நன்மைகளைச் சம்பாதிக்க வேண்டும்," என்று தானே அதைச் செய்வதாக நினைத்துக்கொள்வார்கள். அதற்காகத் தேவனிடத்தில் போய், "நீர் எனக்கு நல்ல படிப்பைத் தர வேண்டும், வேலையைத் தர வேண்டும், பணம் தர வேண்டும், சுகம் தர வேண்டும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களைத் தர வேண்டும், வீடு தர வேண்டும். தொழிலில் வெற்றியைத் தர வேண் டும்," என்று அவர்கள் தேவனிடத்தில் போய்க் கேட்பார்கள். அது தவறு. அது தவறா? ஆம். ஏனென்றால், அது நம்முடைய வேலை அல்ல.

### தேவனுடைய வேலை

தேவன் இந்தப் பூமியில் ஒரு வேலை செய்துகொண்டிருக்கிறார். அந்த வேலையில் நமக்கு ஒரு பகுதி யைக் கொடுத்திருக்கிறார். படிப்பது என்பது யார் கொடுத்த வேலை? நீங்களே செய்கிற வேலையா அல் லது தேவன் கொடுத்த வேலையா? அது தேவன் கொடுத்த வேலை என்பதை நம்மால் நம்பமுடிய வில்லை. "எல்லாரும் பள்ளி கல்லூரிக்குப் போகிறார்கள். அதுபோல, நானும் பள்ளி கல்லூரிக்குப் போகி றேன்," என்ற கண்ணோட்டம், மனப்பாங்கு, தவறு. "தேவன் ஒரு வேலை செய்துகொண்டிருக்கிறார். என்னுடைய வாழ்க்கையிலும் தேவன் வேலைசெய்துகொண்டிருக்கிறார். அந்த வேலையில் அவர் எனக்கு

ஒரு பகுதியைக் கொடுத்திருக்கிறார். இந்த நாட்களில் அந்தப் பகுதி நான் படிப்பது. அது தேவன் கொடுத்த வேலை," என்ற கண்ணோட்டம் வேண்டும். இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

தேவன் ஒரு வேலையைச் செய்யச் சொன்னால் அதற்குரிய வளங்களைத் தருவது யாருடைய பொறுப்பு? நான் ஒருவரிடம் "இந்த வேலையைச் செய்துவிட்டு வா" என்று சொன்னால் அதைச் செய்து முடிப்பதற் குரிய எல்லாவற்றையும் கொடுப்பது யாருடைய பொறுப்பு? அது என்னுடைய வேலை என்றால் அதற்கு நான்தான் பொறுப்பு, படிப்பு தேவன் கொடுத்த வேலை என்றால் அதற்குரிய வளங்களைத்-நேரம், ஞானம், பொருள், வெற்றி-தருவது யாருடைய வேலை? வேலை தேவனுடையது. எனவே, அதற்குரிய வளங் களைத் (நேரத்தை, பணத்தை, ஞானத்தை) தேவன் தருவார். நாம்தான் இந்த வேலையைச் செய்கிறோம் என்றால் நாம் சீக்கிரத்தில் களைத்துப்போவோம். ஆனால், இது தேவனுடைய வேலை. இதில் தேவன் எனக்கு ஒரு பங்கைத் தருகிறார் என்றால் நான் களைத்துப்போக மாட்டேன். செய்ய வேண்டியது யாருடைய பொறுப்பு? தேவனுடைய வேலை.

இதன் பொருள் நாம் சோம்பேறிகளாக இருக்க வேண்டும், நாம் வேலையே செய்யக்கூடாது என்று தேவன் சொல்லுகிறாரா? தேவன் நமக்கு ஒரு பங்குதான் கொடுத்திருக்கிறார். ஆகவே, நாம் ஏனோதானோ வென்று செய்யலாம் என்று அர்த்தமா? ஏனோதானோவென்று படிக்கலாமா? ஏனோதானோவென்று வேலை செய்யலாமா? இதன் பொருள் அதுவல்ல. நம்முடைய பங்கை நாம் முழுப் பலத்தோடும் செய்ய வேண் டும். ஆனால், எப்படிச் செய்யக்கூடாதென்றால் "ஐயோ! நாம் இதில் தோற்று விடுவோமோ!" என்று பயந்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய முழுப் பலத்தோடும், முழு இருதயத்தோடும், இதைச் செய்ய வேண்டும். செய்துவிட்டு நாம் அதை இளைப்பாறுதலோடு விட்டுவிட வேண்டும். அது தேவனுடைய வேலை. எனவே, அதை ஆசீர்வதிப்பது அவருடைய பொறுப்பு.

### தேவனுடைய வேலையில் போராட்டம்

தேவன் ஒரு வேலை கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதில் போராட்டம் இருக்குமா? அவர் தேவன்தானே! அது அவருடைய வேலைதானே! அப்படியானால் அதில் ஏன் போராட்டம் இருக்கிறது? போராட்டம் இருக்கும். ஏன் வேலையையும் கொடுத்து, அதில் போரட்டத்தையும் கொடுக்கிறார்? அவரே எல்லாவற்றையும் செய்துமுடிக்க வேண்டியதுதானே! ஏனென்றால், நாம் ஜீவனில் வளர்வதற்காக. நம் முடைய வளர்த்திக்காக, நம்முடைய முன்னேற்றத்துக்காக, அதைக் கொடுக்கவேண்டியது அவசியம். கிறிஸ்துவின் சாயலை, குணத்தை, உருவாக்க வேண்டுமென்றால் வேலை வேண்டும், அதற்குமிஞ்சி போராட்டம் வேண்டும். போராட்டம் இல்லையென்றால் குணம் உருவாகாது, போராட்டம் என்பது பரீட்சை.

நீதி என்ற கிறிஸ்துவின் பண்புநலனை எடுத்துக்கொள்வோம். "நீதியாக இருந்தால் வாழ முடியாது. நீதி யைக் கைவிட்டுவிட்டால் பிழைக்கலாம்," என்ற போர் வரும்போதுதான் உண்மையிலே கிறிஸ்துவின் பண்பு உருவாகும். அப்படி ஒரு பரீட்சையே வரவில்லையென்றால் நீதியென்கிற கிறிஸ்துவின் பண்பு எப்படி நமக்குள் உருவாகும்? மன்னிப்பை எடுத்துக்கொள்வோம். ஒருவர் நமக்குக் கடும் துரோகம், கடும் இழப்பு, ஏற்படுத்தியிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அது நமக்கு வைக்கப்படுகிற பரீட்சை. அப் போதுதான் கிறிஸ்துவின் பண்பு உருவாகும். எனவே, போராட்டம் இல்லாமல் கிறிஸ்துவின் பண்பு நலன்கள், குணநலன்கள் உருவாகாது.

### தேவன் தரும் வளங்கள்

கடைசியாக, தேவன் ஒரு வேலை கொடுத்திருக்கிறார். ஆனால், அதற்குரிய திராணி என்னிடத்தில் இல்லை என்று நான் நினைக்கிறேன். அப்போது அவர் நாம் இதுவரை அறிந்திராத வகையில் அதைச் செய்துமுடிப்பதற்குத் தேவையான பரம வளங்களைத் தருவார். தேவன் கொடுத்த பணியை நாம் முழு இருதயத்தோடு செய்ய வேண்டும். அது படிப்பாக இருக்கலாம், தேவன் கொடுக்கிற வேலை என்று சொல்லும்போது நான் ஊழியத்தை மட்டும் குறிப்பிடவில்லை. அது நற்செய்தி அறிவிப்பதாக இருக்கலாம். முழு இருதயத்தோடு, முழு பலத்தோடு நாம் சேர்ந்து ஜெபிக்கும்போது தேவன் கண்டிப்பாக வேலை செய்வார். தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

நாம் நற்செய்தியை மிக நேர்த்தியாகச் சொல்லாமல் போகலாம். நாம் ஒருவருக்கு நற்செய்தியை அரை யும்குறையுமாகச் சொன்னாலும்கூட அவர்கள் இரட்சிக்கப்படுவது நமக்கே ஆச்சரியமாக இருக்கும்! அது தேவனுடைய ஆசீர்வாதம். எப்படி இது நடைபெற்றது?

நாம் தேர்வு எழுகிறோம். தேர்வில் தேர்ச்சி பெறுவோமா அல்லது எவ்வளவு மதிப்பெண்கள் வரும் என்று தெரியாது, ஆனால், எல்லாரும் வியக்கும் அளவுக்கு மதிப்பெண்களைப் பெறுவோம். தேவனிடத்தில்

இதை எதிர்பார்க்கலாமா? முழு இருதயத்தோடு நாம் செய்யும்போது தேவனிடத்தில் அந்த ஆசீர்வாதத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

சரி, இதுவரை என்னுடைய வாழ்க்கையில் எல்லாம் தோல்விதான். இனிமேலும் தோல்விதானா? அல்லது தேவன் அதை மாற்ற வல்லவரா? மாற்ற வல்லவர். "ஏற்கெனவே நான் பல தேர்வில் தோற்றுப்போயிருக் கிறோம். இனி என்ன இருக்கிறது? நான் தேர்ச்சி பெறப்போவதேயில்லை," என்று நாம் நினைப்போம். இது பேயின் எண்ணம்.

ஒருவேளை தேவன் ஒரு வேலை கொடுக்கிறார். இதுவரை நான் அதை அலட்சியமாகச் செய்திருக்கிறேன். இன்றைக்கு நான் மனந்திரும்பி, "ஆண்டவரே, நீர் எனக்குக் கொடுக்கிற பணியை எனக்குத் தந்த பலத்தில் நான் செய்கிறேன்," என்று சொல்லி அந்த வேலையைச் செய்ய வேண்டும். நமக்குத் தராத பலத்தை வைத்து அவர் அதைச் செய்யச் சொல்லமாட்டார். தேவன் நம்முடைய பலத்துக்குமிஞ்சி ஒரு வேலையைத் தரவே மாட்டார். "நீர் தந்த பலத்தின்படி, நீர் தந்த நேரத்தின்படி, நான் செய்வேன்," என்பதுதான் நம் மனப்பாங்கு.

ஆனால், நாம் கொஞ்சம் மெய்வருத்தினால் அவருடைய ஆசீர்வாதத்தை இன்னும் அதிகமாகப் பார்க் கலாம். தேவனுக்காக மெய்வருத்த கொஞ்சம் நான் இழக்கிறேன். அப்போது உண்மையிலே தேவன் அந்த ஆசீர்வாதத்தைத் தள்ளிப்போட மாட்டார். தேவன் கொடுத்த பணி, இதை நிறைவேற்றுவதற்காக நான் கொஞ்சம் பாடுபடுகிறேன். என்னுடைய தூக்கத்தை இழக்கிறேன். எனக்கு இன்பமான சிலவற்றை நான் இழக்கிறேன். அப்படியானல் அங்கு தேவனுடைய ஆசீர்வாதம் நிச்சயமாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் வழங்கலாம். எங்கிருந்து அப்படிப்பட்ட ஞானம் வரும் என்று தெரியாது. எப்படி அந்த வளங்கள் வரும் என்று தெரியாது. ஆனால், வரும்.

பிலிப்பியர் 4:19 "*என் தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் தம் மகிமையான வளங்களிலிருந்து உங்களுடைய எல்லாத் தேவைகளையும் நிறைவாக்குவார்*" என்று ஜே.பி.பிலிப்ஸ் புதிய ஏற்பாடு மிக அழகாக மொழிபெயர்த்துள்ளது. ஆகவே, கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நாம் எதிர்பார்க்க வேண்டும். அது எவ்வளவு சாமர்த்தியமாக நாம் எல்லாவற்றையும் செய்கிறோம் என்பதைப் பொறுத்தது அல்ல. கர்த் தர் ஆசீர்வதிப்பதற்கேற்ற தளம் வேண்டும். உள்ளத்தில் உண்மை வேண்டும். மிகவும் ஆழத்தில் தேவன் பார்ப்பார். மிகவும் ஆழத்தில். "*மனிதன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்*" (1 சாமு. 16:7). அவர் மிகவும் ஆழத்தில் பார்ப்பார். இரண்டுபேர் வாக்குவாதம் செய்யலாம். "நீ செய்தாய்" என்று ஒருவர் சொல்ல, "நான் செய்யவில்லை" என்று அடுத்தவர் சொல்ல வாக்குவாதம் தொடரும். புறம்பாகச் சாமர்த்தியமாகப் பேசலாம், காரண காரியங்களைச் சொல்லி வாக்குவாதம் செய்யலாம். ஆனால், தேவன் அவைகளுக்கு அப்பால் ஆழத்தில் பார்ப்பார். அவருடைய கண்களுக்குமுன்பாக எதுவும் மறைவாக இல்லை. கர்த்தருக்குமுன்பாகப் போகும்போது மிகுந்த ஆழத்தில், "நான் ஆசீர்வதிப்பதற்குரிய தளம் இங்கு இருக்கிறது, ஆகவே, மீதியெல்லாம் ஏனோதானோவென்று இருந்தாலும் பரவாயில்லை. நான் ஆசீர்வதிக்கப்போகிறேன்," என்று சொல்வார்.

தவன் தருகிற வேலை, படிப்பு, எல்லாவற்றையும் தேவன் தந்திருக்கும் பலத்தோடும் வளங்களைக்கொண் டும் முழு இருதயத்தோடு செய்யும்போது ஆசீர்வதிக்கும் பொறுப்பு தேவனுடையது. வேலை அவ ருடையது என்பதால் தேவன் நிச்சயமாக ஆசீர்வதிப்பார். ஆமென்.